Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 1/2020 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosection – **PW**14 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | வடிவேல் முருகன் |
| Father/Husband Name | : | **சீனி** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.04.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு நகர் சட்ட ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.12.2014 ம் வருடம் மதுரை மாவட்டம் சிலைமான் மற்றும் கருப்பாயூரணி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்று கருப்பாயூரணி நிலைய சார்பு ஆய்வாளர் சந்திரசேகர் அவர்களால் வரிச்சியூர் கிராம நிர்வாக அலுவலர் விக்னேஷ் குமார் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 628/2014 பிரிவுகள் குவிமுச 174 சந்தேக மரணம் பதிவு செய்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். காலை 08.15 மணிக்கு வழக்கின் கோப்பை பெற்று சம்பவ இடமான வரிச்சியூர் மதுரை முதல் சிவகங்கை மெயின் ரோடு நியாயவிலைக்கடை கிழக்கு சுவரின் ஓரம் காலை 08.30 மணி முதல் 09.00 மணி வரை சம்பவ இடம் சென்று வரைபடம் மற்றும் 09.00 மணி முதல் 09.30 மணி வரை

சாட்சிகள் செல்வம் மற்றும் தாலைமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் தயார் செய்தேன். வரைபடம் அ.சா.ஆ.10. பார்வைமகஜர் சாட்சிகளான செல்வம், தாலைமுத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காலை 09.30 முதல் 11.30 வரை பஞ்சாயத்தார்களான இராமநாதபுரத்தை சார்ந்த சக்தி, தங்கத்துரை, அபுதாகில் , கஜினி மற்றும் சிக்கந்தர் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.11. பின்பு இறந்த நபர் பற்றி தெரிந்து அவர்களுடைய உறவினர்களான இறந்தவரின் அப்பா சுரேஷ் மற்றும் சக்தி, இறந்தவரின் அம்மா லதா மற்றும் புகார்தாரரான விஏஓ வரிச்சியூர் விக்னேஷ் குமார் மற்றும் கிராம உதவியாளர் கோமதி ஆகியோர்களை விசாரித்து தனித்தனி வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இறந்த நபரின் பிரேத பரிசோதனை செய்யவேண்டி சார்பு ஆய்வாளர் சந்திரசேகருடன் முதல்நிலைகாவலர் நல்லதம்பி என்பவருடன் மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். உடற்கூறுஆய்வு செய்வதற்கான வேண்டுகோள் கடிதத்தை முதல்நிலைகாவலர் நல்லதம்பியிடம் கொடுத்து அனுப்பிவைத்தேன். பிரேத பரிசோதனை முடித்து அருண்குமாரின் பிரேதத்தை அவரது உறவினர்களிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஜோன் என்று எழுதப்பட்ட சந்தன கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்று, எல்பீ என்று காலரில் எழுதப்பட்ட வெள்ளைநிற முழுக்கை சட்டை ஒன்று, ஜாக்கி கம்பெனி சிவப்பு பார்டர் சிமிண்ட் கலர் ஜட்டி, காப்பி கலர் கர்சிப் சிறிய பூப்போட்டது ஒன்று, பெட்ரான் கம்பெனி வாட்ச் ஒன்று, இருசக்கர வாகனத்தின் சாவி ஒன்று, என்னிடம் ஒப்படைத்ததை படிவம் 95 மூலம் மதுரை நீதித்துறை நடுவர் எண் 2க்கு அனுப்பிவைத்தேன். அதே காவலரிடம் இறந்த நபரின் உடல் உள்ளுறுப்புக்களை பரிசோதனை செய்ய வேண்டி மதுரை நீதித்துறை நடுவர் எண் 2க்கு மூலம் அனுமதிபெற்று அனுப்பிவைத்தேன். ஜோன் என்று எழுதப்பட்ட சந்தன கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்று சா.பொ.2. எல்பீ என்று காலரில் எழுதப்பட்ட வெள்ளைநிற முழுக்கை சட்டை ஒன்று, சா.பொ.3. ஜாக்கி கம்பெனி சிவப்பு பார்டர் சிமிண்ட் கலர் ஜட்டி சா.பொ.4. காப்பி கலர் கர்சிப் சிறிய பூப்போட்டது ஒன்று சா.பொ.5. பெட்ரான் கம்பெனி வாட்ச் ஒன்று சா.பொ.6. இருசக்கர வாகனத்தின் சாவி ஒன்று சா.பொ.7. 20.12.2014 அன்று கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண் 249/2014 இதச பிரிவு 302 வழக்கில் சுமார் 17.00 மணியளவில் பட்டிணம் காத்தான் ஈசிஆர் சந்திப்பில் வாகன தணிக்கை

செய்த போது கேணிக்கரை காவல் ஆய்வாளரால் கைது செய்யப்பட்ட எதிரிகளான சரவணன், உதயகுமார், மாவீரன் என்ற பால்பாண்டி ஆகியோர்களை கைது செய்து 1 வது எதிரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.12.2014 அன்று இராமநாதபுரம் ரோமன் சர்ச் பெட்ரோல் பங்க் அருகே அன்று மதுரையிலிருந்து வந்த 3 நபர்கள் அருண்குமாரின் வாகனத்தை பெட்ரோல் பங்க் அருகில் நிறுத்திவிட்டு அவரிடம் பேச வேண்டும் என்று கூறி அருண்குமாரின் அனுமதி இல்லாமல் அவரை கடத்தி சென்று மதுரை அருகே உள்ள மணலூர் கிராமம், சிவகங்கை மாவட்டம் ஜெய்பாரத் அப்பார்ட்மெண்டில் முன்பே வாடகைக்கு எடுத்து வைத்திருந்த பிளாட்டில் வைத்து அவரிடம் மிரட்டி உயிர் பயத்தை ஏற்படுத்தி அவர் கைப்பட கடிதம் எழுத வைத்துவிட்டும், முன்பே அவர்கள் திட்டமிட்டபடி அவர்கள் மூவரும் அருண்குமாருக்கு விஷத்தை பிராந்தியில் கலந்து கொடுத்ததாகவும், அதனை இறந்த நபர் மறுத்ததால் 3 பேரும் சேர்ந்து அவர் கையை கட்டிவிட்டு மது கலந்த விஷத்தை அவரது வாயில் ஊற்றி இரவு இறந்துவிட்டார் என்று உறுதி செய்து அருண்குமாரின் இறந்த உடலை வரிச்சியூர் மெயின் ரோட்டில் அருகில் உள்ள நியாயவிலைக்கடையின் கிழக்கு பக்க சுவரில் பிரேதத்தை எதிரிகள் மிரட்டி எழுதிய கடிதத்தை இறந்த நபரின் சட்டை பாக்கெட்டில் வைத்து விட்டு பிரேதத்தை அங்கு வீசிவிட்டு சென்றுவிட்டார்கள் என்று அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி நான் மதுரை நீதித்துறை நடுவர் எண் 2ல் 05.01.2015 அன்று இந்த 3 எதிரிகளையும் காவலில் எடுத்து விசாரிப்பதற்காக பிரமான பத்திரம் தாக்கல் செய்து 06.01.2015 அன்று மாலை 06.00 மணி முதல் 09.01.2015 மாலை 06.00 மணி வரை எனது விசாரணைக்கு எடுத்து விசாரித்து 07.01.2015 அன்று 3 எதிரிகளையும் காவல் நிலையத்தில் வைத்துவிட்டு மறுநாள் 08.01.2015 காலை 07.00 மணிக்கு சாட்சிகள் விஏஓ விக்னேஷ் குமார், கிராம உதவியாளர் கோமதி ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி சரவணனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். 2ம் எதிரியான உதயகுமார் என்பவர் காலை 09.00 மணிக்கு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் மூலம் பதிவு செய்தேன். காலை 10.30 மணிக்கு 3ம் எதிரி மாவீரன் என்ற பால்பாண்டி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் மூலம் பதிவு செய்தேன். மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் 08.01.2015 அன்று 14.30 மணிக்கு இராமநாதபுரம் ரோமன் சர்ச்

பெட்ரோல் பல்க் இடத்திற்கு சென்று அந்த இடத்தை சாட்சிகள் முருகேசன், குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வைமகஜர் அ.சா.ஆ.12, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.13. பின்பு எதிரிகள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஜெய்பாரத் அப்பார்ட்மெண்ட் கதவு எண்.6 வீட்டிற்கு 1ம் எதிரி சரவணன் மற்றும் 2, 3 எதிரிகள் எங்களையும் சாட்சிகளையும் கூட்டிச்சென்று அங்கு மறைத்துவைத்திருந்த பணம் ரூ.15,000/– மற்றும் HP 8 GB PENDRIVE ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அதனை சாட்சிகள் விஏஓ விக்னேஷ் குமார், கிராம உதவியாளர் கோமதி முன்னிலையில் அத்தாட்சி தயாரித்து கைப்பற்றினேன். HP 8 GB PENDRIVE ஒன்று சா.பொ.8. அதன் பின்பு எதிரிகளையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து காவல் விசாரணை முடிந்து 08.01.2015 அன்று எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சட்டப்பிரிவை இதச 366, 302 , பிரிவிலிருந்து இதச 366, 302 மற்றும் 380 ஆக மாற்றம் செய்து என் விசாரணை முடித்து 09.01.2015 அன்று எதிரிகளையும், எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் ஒப்புதல் வாக்குமூலங்களையும் மதுரை நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தேன். அதன் பின்னர் என் விசாரணையை முடித்து இந்த சம்பவம் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்ததால் குற்றத்துறை இயக்குநரிடம் கருத்துரை பெற்று வழக்கின் கோப்பை மதுரை தென்மண்டல ஐஜி உத்தவின் படியும் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் உத்தரவின் படியும் 12.02.2015 அன்று இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிவைத்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1ம்எதிரி சரவணனையும் 3ம்எதிரி மாவீரன் என்ற பால்பாண்டியையும் 08.01.2015 அன்று தான் நீதிமன்றத்திலிருந்து காவல் துறை கஸ்டடியில் எடுத்து ஒப்புதல் வாக்குமூலங்கள் பெற்றேன் என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கிற்கு முன்பு நடந்த குற்ற எண். 249/2014 என்ற வழக்கின் சம்பவத்தை தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு முன்பு 05.01.2015 அன்றே முந்தைய வழக்கின் சம்பவத்தை தெரிந்து கொண்டேன். பிரேத விசாரணை அறிக்கை காலம் 9ல் வினோத் மணியின் கொலை சம்பவத்தை பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காலம் 11 (அ) ல் குற்ற எண்.249/2014

வழக்கில் தலைமறைவாக உள்ள 1ம் எதிரி சரவணம் மீதும் அவரது கூட்டாளிகள் மீதும் சந்தேகம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையானது நான் சொன்ன தேதியில் தயாரிக்கப்படவில்லை என்றும் பின்னிட்டு யோசனை செய்து காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கை காலம் 15ல் உள்ள சங்கதிகள் பின்னிட்டு யோசனை செய்து காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல 1, 3 எதிரிகள் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலங்கள் எதையும் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் அவர்களிடமிருந்து எந்தவித பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலங்களை பின் யோசனை செய்து நான் எழுதிக்கொண்டு எதிரிகளை மிரட்டி அவர்களிடம் கையெழுத்துகளை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் நான் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு யோசனை செய்து காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வைமகஜர், வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் சம்பவ இடத்தில்வைத்து விசாரிக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயாரித்துள்ளேன் என்றும், சம்பவ இடத்தில் வைத்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், ஜெய்பாரத் அப்பார்ட்மெண்டில் இருந்து பணம் ரூ.15,000/– மற்றும் பென்டிரைவ் ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.